1996 ஆகஸ்ட் 20]

21--

ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலிப் பணியாளர்கள்

வினா எண் *1443*--**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலிப் பணியாளர்களை நியமிப்பதற்கு அரசு ஏதாவது நெறிமுறை வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஊராட்சி ஒன்றியங்களில் தினக்கூலிப் பணியாளர்களை நியமிப்பது பற்றி அரசு நெறிமுறைகள் எதுவும் வகுக்கவில்லை. எனினும் சில்லறைச் செலவினப் பணியாளர்கள், அதாவது மாதந்தோறும் தொகுப்பூதியம் பெறுபவர்களின் பணியினை நிரந்தரம் செய்வதற்காக சில விதிமுறைகள், 878 எண் 15–5–1981 நாளிட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வாணையில் 1–4–1981–ல் பத்து ஆண்டுகாலம் பணிமுடித்த சில்லறைச் செலவினம் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாணையில் 1–4–1981–க்குப் பின்னர் சில்லறைச் செலவினப் பணியாளர்களை பணியமர்த்தக் கூடாது. புதிய மற்றும் 1–4–1981–க்குப் பின்னர் சில்லறைச் செலவினம் பணியாளர்களை பணியமர்த்தக்கூடாது. புதிய மற்றும் 1–4–1981–க்குப் பின் பத்து ஆண்டு பணி முடித்தவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களது பணியினை முறைப்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்கூறிய வகையில் சில்லறைச் செலவினப் பணியாளர்களை முறைப்படுத்துவதில் ஏற்படக்கூடிய செலவினத்தை அந்தந்த ஊராட்சி அமைப்புகளே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.